செ.வெ.எண்.24 நாள்: 14.04.2020

# அரியலூர் மாவட்டம்
# கிட்டகிகளில் இலவசமாக சேமிக்கும் வசதி மற்றும் வியாபாரிகளுக்கு 1% சந்தை கட்டணம் ரத்து - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பிற்காக, 144 ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள நிலையில், பொது மக்களுக்கு தேவைப்படும் முக்கிய உணவுப்பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் போர்கால அடிப்படையில் உணவு தானியங்கள், காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் உற்பத்தி செய்கின்ற வேளாண் பொருட்களின் நலனை கருத்தில் கொண்டு கீழ்கண்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் உற்பத்தி செய்த விளைப்பொருட்களை சந்தைக்கு எடுத்து சென்று விற்பனை செய்வதில் சிரமங்கள் ஏற்படாமல் இருக்க, பெரம்பலூர் விற்பனைக்குழு செயலாளர் (செல்: 8220948166) மற்றும் அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் (செல்: 7373877047) மற்றும் ஜெயங்கொண்டம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (செல் : 9865639680) அவர்களையும் தொடர்பு கொண்டு விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விற்பனை செய்து பயன் அடையலாம்.

மேலும், விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத பட்சத்தில், தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனை கூட கிட்டங்கியில் இருப்பு வைத்து விளைபொருட்களின் அன்றாட சந்தை மதிப்பில் 75% அதாவது ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மிகாமல் 30 தினங்களுக்கு வட்டியில்லா பொருளீட்டுக்கடன் பெற்று பயனடையலாம்.

காய்கறிகள் மற்றும் பழங்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்களது விளைபொருட்களை தேவைப்படும் காலங்களில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ள குளிர்பதனக் கிட்டங்கியில் (25 மெ.டன்) இலவசமாக 30.04.2020 வரை இருப்பு வைத்து பயனடையலாம்.

தற்பொழுது நெல், சிறு தானியங்கள், பயிறு வகைகள், நிலைக்கடலை, எள், தேங்காய், பருத்தி, மிளகாய், வெல்லம், முந்திரி உள்ளிட்ட விளைபொருட்களை விவசாயிகள் விற்பனை செய்யும்போது, வியாபாரிகளிடமிருந்து விற்பனை மதிப்பில் 1 சதவீதம் சந்தை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தற்போது நிலவி வரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் விளைபொருட்களை நியமான விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏதுவாக, தற்பொழுது வியாபாரிகள் செலுத்தும் 1 சதவீதம் சந்தை கட்டணம் (Market Fees) எதிர்வரும் 30.04.2020 வரை ரத்து செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் நலனுக்காக அரசு அறிவித்துள்ள மேற்கண்ட வசதிகளை அனைத்து வேளாண் பெருமக்கள் மற்றும் வியாபாரிகள் பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் எவ்வித தடையுமின்றி கிடைத்திட உதவிடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**